# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

## TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION

(Recognized by the Govt of Tamilnadu, G.O.No.341, Dt.22.03.1980)

பேரா. நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
Phone : 044-28414354, Email : drmanjunaths@gmail.com, Website : www.tngcta.org


**தேதி** : 21.10.2018

**அன்பிற்கினிய தோழர்களே! தோழியரே! வணக்கம்,**

நமது கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் நேற்று **21.10.2018** காலை **10.30** மணியளவில் சென்னை, அரசு கலைக்கல்லூரி, நந்தனம் கிளையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இச்சுற்றறிக்கையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

1. திட்டமிட்டபடி, நிலுவையிலுள்ள கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்து கிளைகளிலும், எதிர்வரும் 29.10.2018 முதல் உள்ளிருப்புப் போராட்டம் (பருவ விடுமுறையில் உள்ள கல்லூரிக் கிளைகள் உட்பட) நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

2. கோரிக்கைகள் தொடர்பாக கழகம் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படும்போது கோரிக்கை நிறைவேறுவதற்கான முன்னெடுப்பு நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு போராட்டத்தின் போக்குகளை முடிவு செய்ய மாநில ஆட்சிக்குழுவிற்கு அதிகாரமளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

3. ஜாக்டோ-ஜியோ அறிவித்துள்ள காலவரையறையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்தில் பங்கேற்பது எனவும், இது தொடர்பாக நமது கிளைக்கல்லூரிகளின் இரண்டாம் பருவ தொடக்க நாட்களை கணக்கில் கொண்டு, அனைத்துக் கல்லூரிகளும் போராட்டத்தில் பங்கெடுக்கும் வண்ணம் உரிய முடிவு எடுக்கப்படும்.

4. கடந்த 04.10.2018 அன்று நடைபெற்ற ஒருநாள் ஒட்டுமொத்தத் தற்செயல் விடுப்பில் பங்கேற்காத உறுப்பினர்கள் மீது கிளை மற்றும் மண்டலங்க்கள் சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பின்னேற்பு வழங்குவது எனத்தீர்மானிக்கப்பட்டது.

5. எதிர்வரும் 23, 24 மற்றும் 25 நவம்பரில் நடைபெறும் அய்பெக்டோ தேசிய மாநாட்டில் கலந்துகொள்வதற்கான பேராளர் கட்டணம் ரூ.2500/- -ஐ 31.10.2018 தேதிக்குள் செலுத்தி பதிவு செய்து அதிக அளவில் உறுப்பினர்கள் பங்கு பெற வேண்டும்.

6. கழக மாநில மாநாடு மற்றும் அய்பெட்டோ தேசிய மாநாடு தொடர்பான நிதி ரூ.1000/- ஐ 31.10.2018 தேதிக்குள் அதற்குரிய வங்கிக்கணக்கில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள கிளைச்செயலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. பணி ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துதல்.

8. TRB ஆசிரியர்களின் முந்தைய பணிக்காலத்தை பணி மேம்பாட்டிற்கு கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

9. புதிய பென்சன் திட்டத்தைக் கைவிட்டு பழைய பென்சன் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

10. மத்திய அரசு ஊழியர்களுக்கு உள்ளது போல் பணிக்கொடை (சிபிஎஸ் திட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு) வழங்க ஆவன செய்ய வேண்டும்.

11. பணிமேம்பாடுகள் காலமுறைப்படி மட்டுமே வழங்கப்படவேண்டும்.

12. ஆண்டு 2000 முதல் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ஒருங்கிணைந்த உள்மூப்புப் பட்டியல் வெளியிடவேண்டும்.

13. திருத்தப்பட்ட 1998 உள்பணிமூப்புப்பட்டியலை விரைந்து வெளியிடவேண்டும்.

14. மூத்தோர் – இளையோர் ஊதிய முரண்பாடு களைவதற்கான கருத்துருக்கள் மீது நடவடிக்கை வேண்டும்.

15. வேலூர் மண்டலச் செயலரை கழகத்தின் அனைத்து செயல்பாடுகளிலிருந்தும் தற்காலிகமாக நீக்கிவைப்பது என்ற ஆட்சிக்குழுவின் முடிவிற்கு பின்னேற்பு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

16. எதிர்வரும் 29.10.2018 முதல் நடைபெறும் உள்ளிருப்புப் போராட்டத்தில் வேலூர்

பேரா. நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
Phone : 044-28414354, Email : drmanjunaths@gmail.com, Website : www.tngcta.org


மண்டலத்தை முழுமையாகப் பங்குபெறச் செய்ய மாநில ஆட்சிக்குழு சார்ந்த கிளைகளுக்குச் சென்று ஒருங்கிணைப்பது எனத்தீர்மானிக்கப்பட்டது.

17. உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கழகம் தொடர்பான விமர்சனங்கள் அல்லது வினவுதல்களை உரியவரிடம் நேரசியாகவோ / தொலைபேசியிலோ அல்லது சார்ந்த செயற்குழு அல்லது பொதுக்குழுக் கூட்டங்களிலோ விவதிக்க வேண்டும். இவை தொடர்பாக எந்த ஒரு (அங்கீகாரம் பெற்ற அல்லது வெளி) புலனக்குழு உள்ளிட்ட சமூக ஊடகத்திலும் பதிவிடக்கூடாது.

18. ஜாக்டோ-ஜியோ 04.10.2018 ஒருநாள் ஒட்டுமொத்த தற்செயல் விடுப்புப் போராட்டத்தில் முதல் நாளே விடுப்பு விண்ணப்பமளித்து பங்கேற்றதால், இதனை முன் அனுமதியுடன் கூடிய விடுப்பாகக் கருதி, அன்றைய விடுப்புக்கு ஊதியப்பிடித்தம் செய்யக்கூடாதென கல்லூரி முதல்வர்களைக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

19. 2015-ல் பணியில் சேர்ந்து ஒரு மாத காலம் ஒரு கல்லூரியில் பணியாற்றி, புதிய ஆணை பெற்று பணியிடமாறுதல் பெற்ற ஆசிரியர்களுக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கிலெடுத்து ஊதியம் வழங்கவேண்டும்.

20. பணிமேம்பாட்டுக்கென சார்ந்த பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட பாட வல்லுநர் பட்டியலை நிறுத்தி வைக்க வேண்டும்.

21. தேர்வு, பயிற்றுவித்தல், படித்தல் மற்றும் மதிப்பீட்டுப்பணி ஆகியவற்றை எஸ்மா-ன் கீழ் கொண்டுவருவதற்கென மத்திய மனிதவள் மேம்பாட்டு அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழுவை உடனடியாக கலைக்க வேண்டுமென இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

இரா. தாமோதரன்
பொதுச்செயலர், TNGCTA